Tamil | தமிழ்

பதிப்பு 1.0 | பிப்ரவரி 2023

# விக்டோரியாவின் குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள்

## எளிய மொழி வழிகாட்டி

COMMISSION FOR CHILDREN AND YOUNG PEOPLE

# குழந்தைப் பாதுகாப்பு தரநிலைகள் என்பவை யாவை?

- ஜனவரி 2016 இல் விக்டோரியாவில் குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் (தரநிலைகள்) தொடங்கப்பட்டது.
- குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாக்கத் தரநிலைகள் உதவுகின்றன.
- 11 குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் உள்ளன.
- குழந்தைகளுடன்[1] பணியாற்றும் நிறுவனங்கள் அவசியம் தரநிலைகளுக்கு இணங்க வேண்டும். இணங்குதல் என்பது ஒவ்வொரு தரநிலையையும் பின்பற்றுகிறீர்கள் மற்றும் பூர்த்திசெய்கிறீர்கள் என்பதை உணர்த்த உங்கள்[2] நிறுவனத்தில் அனைத்தும் அதனிடத்தில் இருக்கவேண்டும்.




*இந்த ஆவணம் குழந்தைப் பாதுகாப்பு தரநிலையின் ஒரு சுருக்கம் ஆகும். தரநிலைகளை விளக்குவதற்கு உதவ எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய சொற்களும் படங்களும் இதில் உள்ளன. இதில் தரநிலைகளின் முழு உரையோ அல்லது அதற்கு இணங்குவதற்கு நீங்கள் செய்யவேண்டிய அனைத்துமோ உள்ளடங்கவில்லை. தரநிலைகளின் முழு உரையையும், எவ்வாறு இணங்குவது என்பதைப் பற்றிய மேலும் விவரங்களையும் எங்கள் வலைத்தளத்தில் நீங்கள் வாசிக்கலாம்.*

1 "குழந்தைகள்" என்பது 18 வயதிற்கு உட்பட்டவர்களைக் குறிக்கிறது.

2 "உங்கள் நிறுவனத்தைப்" பற்றி பேசும் பொழுதும் நாங்கள் "உங்கள்" என்ற சொல்லையும் பயன்படுத்துவோம்.

## குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 1







**பழங்குடியினக் குழந்தைகள் கலாச்சார ரீதியாகப் பாதுகாப்பாக உணருவதை நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் அடையாளத்திற்கும் அனுபவங்களுக்கும் மரியாதை கொடுத்து மதிக்க வேண்டும்.**

உங்கள் நிறுவனமும் பணியாளர்களும் இவற்றைப் பின்பற்றவேண்டும்:

- பழங்குடியின[3] மக்கள், அவர்களது கலாச்சாரம் மற்றும் அவர்களது உரிமைகளை வரவேற்க வேண்டும்
- பழங்குடியினக் குழந்தைகள் பாதுகாப்பாகவும் நலமாகவும் உணர இது எவ்வாறு உதவுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்
- இனவெறியை அனுமதிக்கக்கூடாது மேலும் இனவெறியைக் கையாள விதிகளும் செயல்முறைகளும் கொண்டிருக்க வேண்டும்
- பழங்குடியினக் குழந்தைகள் தங்களது வெவ்வேறு அடையாளங்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் மொழிகளை வெளிப்படுத்த உதவ வேண்டும்
- பழங்குடியினக் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்கள் உங்கள் நிறுவனத்தில் ஈடுபட உதவ வேண்டும்
- அவர்கள் கலாசார ரீதியாகப் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்
- நீங்கள் இவற்றைச் செய்துள்ளீர்கள் என்பதைக் காட்டும் கொள்கைகளும் அமைப்புகளும் உள்ளன

3 'பழங்குடியினர்' என்ற சொல்லை நாங்கள் பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரைக் குறிக்கப் பயன்படுத்துகிறோம்.

# குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 2



குழந்தைகளைப் பாதுகாப்பாகவும் நலமாகவும் வைத்திருப்பதில் நிறுவனத்தின் தலைவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். குழந்தைகளுக்கு தவறான பயன்பாடு அல்லது தீங்கு ஏற்படும் ஆபத்தைக் கண்டுபிடித்து, தவிர்த்து அதை நிறுத்தும் செயல்முறைகளை நிறுவனங்கள் வைத்திருக்கின்றன.

உங்கள் நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- குழந்தைப் பாதுகாப்பிற்கு ஒரு **பொது அர்ப்பணிப்பை** மேற்கொள்ள வேண்டும். அதாவது உங்கள் நிறுவனத்திற்கு குழந்தைப் பாதுகாப்பு முக்கியமானது என்பதை சமூகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்
- **குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு கொள்கையைக்** கொண்டிருக்க வேண்டும். இது உங்கள் நிறுவனம் குழந்தைகளை எவ்வாறு பாதுகாப்பாக வைக்கிறது என்பதை விளக்கும் ஆவணம் ஆகும்.
- நிறுவனத்தில் உள்ள அனைவரும் குழந்தைப் பாதுகாப்பை ஊக்குவிப்பதை உறுதி செய்யவேண்டும்
- பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஒரு எழுதப்பட்ட **நடத்தை விதிகள்** கொண்டிருக்க வேண்டும். குழந்தைகளுக்கு நடுவே எவ்வாறு நடக்க வேண்டும் மேலும் எவை கூடாது என்பதை பணியாளர்களுக்கு விளக்கும் ஆவணம் இது.
- குழந்தைகளுக்கான ஆபத்தை நீங்கள் எவ்வாறு கண்டறிவது, தவிர்ப்பது மற்றும் நிறுத்துவது என்பதை ஆவணப்படுத்த வேண்டும்.
- குழந்தைப் பாதுகாப்பு தொடர்பாக எவ்வாறு தகவல்களைப் பகிர்வது மற்றும் பதிவுகளை வைப்பது என்பதைப் பணியாளர்கள் புரிந்துகொள்வதை உறுதிசெய்ய வேண்டும்.

# குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 3




தங்கள் உரிமைகள் பற்றியும், அவை தீவிரமாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதும் குழந்தைகள் அறிந்திருக்கிறார்கள், மேலும் அவர்களைப் பாதிக்கும் முடிவுகளில் பங்கேற்கிறார்கள்.

உங்கள் நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- பின்வருவன பற்றிய அவர்களது உரிமைகளைக் குழந்தைகளுக்குக் கூற வேண்டும்:
  - பாதுகாப்பு
  - தகவல்
  - தங்களைப் பற்றிய முடிவுகளில் பங்கேற்பது
- நட்புகளின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வது மற்றும் ஊக்குவிப்பது. இது குழந்தைகளைப் பாதுகாப்பாக உணர வைக்கும்
- பாலியல் தவறான பயன்பாட்டைத் தவிர்ப்பதற்கான திட்டங்களையும் தகவல்களையும் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும்
- பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இவற்றைச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும்:
  - குழந்தைகளிடத்தில் குழந்தை தொடர்பான தவறான பயன்பாடு மற்றும் தீங்கின் அறிகுறிகளை அடையாளம் காணுங்கள்
  - குழந்தைகள் வெளிப்படையாகவும் அவர்களைக் கவலைப்படுத்தும் விஷயங்களைப் பேசுவதற்கும் உதவுங்கள்
- உங்கள் நிறுவனத்தில் குழந்தைகள் ஈடுபாட்டுடன் இருக்க உதவுங்கள்
- குழந்தைகள் பாதுகாப்பாக உணர்ந்து, உங்கள் நிறுவனத்தில் ஈடுபாட்டுடன் இருக்க விரும்புமாறு அவர்கள் சொல்வதற்கேற்ப செயல்பட வேண்டும்.

# குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 4



நிறுவனங்கள் குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாப்பாக எப்படி வைத்திருக்கிறார்கள் என்பதை குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் தெரிவிக்கின்றன. குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாப்பாக வைப்பதில் ஈடுபாட்டுடன் இருப்பதை ஊக்குவிக்கிறார்கள்.

உங்கள் நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- தங்கள் குழந்தைகளைப் பாதிக்கும் முடிவுகளை எடுப்பதில் குடும்பங்கள் பங்கேற்க உதவ வேண்டும்
- உங்கள் நிறுவனம் எவ்வாறு குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாப்பாக வைத்திருக்கிறது என்பதை குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் கூற வேண்டும்
- குடும்பங்களும் சமூகமும் இந்தத் தகவலை எளிதில் கண்டறிந்து புரிந்துகொள்வதை உறுதி செய்ய வேண்டும்
- உங்கள் நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் பழக்கங்களில் குடும்பங்கள் மற்றும் சமூகத்தின் கருத்தும் ஏற்றுக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும்
- குடும்பங்கள், பராமரிப்பாளர் மற்றும் சமூகத்திடம் உங்கள் நிறுவனம் குறித்தும் அது எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றியும் கூறுங்கள்.

# குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 5



ஒவ்வொரு குழந்தையும் வேறுபட்டவர்கள் என்பதை நிறுவனங்கள் புரிந்துகொள்கிறது. அவர்களுக்குத் தேவைப்படும் பராமரிப்பு மற்றும் ஆதரவை வழங்க ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட தேவைகளையும் கருத்தில் கொள்கிறது.

உங்கள் நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- ஒவ்வொரு குழந்தையும் வேறுபட்டவர்கள் மேலும் சில குழந்தைகளுக்கு சற்று அதிக ஆதரவு தேவைப்படும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்
- கீழ்கண்ட நிலையில் உள்ள குழந்தைகளின் தேவைகளைப் புரிந்துகொண்டு உதவ வேண்டும்:
  - இயலாமை உள்ளவர்கள்
  - வெவ்வேறு கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள்
  - வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்கள்
  - வீட்டில் வசிக்க முடியாதவர்கள்
  - ஒருபாலீர்ப்புடைய பெண், ஒரு பாலீர்ப்புடைய ஆண், இருபாலின ஈர்ப்பாளர், திருநங்கை, பாலின ஈர்மறைக்கு அப்பாற்பட்டவர், வேறுபட்ட பாலினத்தவர், அல்லது ஊடுபாலினத்தவர்
- குழந்தைகளுக்குத் தேவையான தகவல் மற்றும் உதவியை எளிதில் பெறுவதை உறுதி செய்யவேண்டும். இது கலாசார ரீதியாகப் பாதுகாப்பானதாகவும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும்
- புகாரளிப்பது மற்றும் அந்தச் செயல்முறையைப் புரிந்துகொள்வது குழந்தைகளுக்கு எளிதாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்
- பழங்குடியினக் குழந்தைகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அவர்கள் எப்பொழுதும் கலாசார ரீதியாகப் பாதுகாப்பாக உணருவதை உறுதி செய்யவேண்டும்.

# குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 6



## குழந்தைகளுடன் பணிபுரியும் மக்கள் தகுதியானவர்கள் என்பதை நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும். குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாப்பாக வைப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பது பணியாளர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் மேலும் ஆதரிக்கப்பட வேண்டும்.

உங்கள் நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- புது பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களைப் பணியமர்த்தும்போது குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வில் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் பணியைத் துவங்கும் முன்பு விளம்பரம், பரிந்துரைப் பரிசோதனை மற்றும் திரையிடல் ஆகியவற்றில் இருக்கலாம்
- பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு சரியான பின்புல பரிசோதனைகள் இருப்பதை உறுதி செய்யவேண்டும்
- குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாப்பாக வைப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பது புது பணியாளர்களுக்குத் தெரிந்திருப்பதை உறுதிசெய்யவேண்டும். இதில் இவை அடங்கும்:
  - சரியான பதிவுகளை வைத்திருத்தல்
  - எப்பொழுது தகவல்களைப் பகிரலாம் என்பதை அறிதல்
  - எப்பொழுது மற்றும் எவ்வாறு அறிக்கையிடலாம் என்பதை அறிதல்
- பணியாளர்கள் குழந்தைப் பாதுகாப்பில் கவனம் செலுத்த மேலாளர்கள் உதவுவதை உறுதிசெய்தல்.

# குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 7



## புகார்கள் மற்றும் கவலைகளுக்கான செயல்முறைகள் குழந்தையைச் சார்ந்திருக்க வேண்டும்

உங்கள் நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- புகார்க் கொள்கை கொண்டிருக்க வேண்டும். இந்தக் கொள்கையானது:
  - எளிதில் கண்டறிந்து படிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்
  - குழந்தையைச் சார்ந்திருக்கவேண்டும்
  - இவற்றை விளக்க வேண்டும்:
    - மேலாளர்கள், பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் என்ன செய்ய வேண்டும்
    - வெவ்வேறு வகையான புகார்களை எவ்வாறு கையாள்வது
    - கொள்கைகள் அல்லது நடத்தை விதிகள் பின்பற்றப்படவில்லை என்றால் என்ன செய்வது
    - காவல்துறை போன்ற அதிகாரத்திடம் உங்கள் நிறுவனம் பதிவு செய்யும்பொழுது
- புகார்களை உங்கள் நிறுவனம் எவ்வாறு கையாளுகிறது என்பதை குழந்தைகள், குடும்பங்கள், பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவரும் புரிந்துகொள்வதை உறுதி செய்யவேண்டும்
- புகார்களை முறையாகவும் கலாசார ரீதியாகப் பாதுகாப்பாகவும் கையாள வேண்டும்
- அனைத்து புகார்களும் தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டும் மேலும் உடனடியாக பதிலளிக்கப்பட வேண்டும்
- இவற்றைப் பற்றிய கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் கொண்டிருக்க வேண்டும்:
  - உங்கள் நிறுவனத்திடம் எவ்வாறு புகார்களைப் பதிவு செய்வது
  - யாரிடம் பதிவு செய்வது
  - எப்பொழுது பதிவு செய்வது
  - காவல்துறை மற்றும் பிற அதிகாரிகளிடம் எவ்வாறு புகாரளிப்பது, மற்றும் பணிபுரிவது
- புகாரளித்தல், தனியுரிமை மற்றும் வேலைவாய்ப்பு குறித்த அனைத்துச் சட்டங்களையும் பின்பற்ற வேண்டும்.

## குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 8



குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாப்பாக வைத்திருக்க பணியாளர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சியை நிறுவனங்கள் வழங்குவார்கள்.

உங்கள் நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு கொள்கையைப் பின்பற்றுங்கள்
- குழந்தைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கின் அறிகுறிகளை அறிந்து கொள்ளுங்கள். இதில் பிற குழந்தைகளால் ஏற்படும் தவறான பயன்பாடு மற்றும் தீங்கும் அடங்கும்
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு பிரச்சனைகளுக்குப் பதிலளியுங்கள்
- குழந்தைப் பாதுகாப்பு சார்ந்த ஒரு பிரச்சனையைக் கையாளும் பணியாளருக்கு உதவுங்கள்
- கலாசார ரீதியாக இன்னும் பாதுகாப்பாக குழந்தைகளை எப்படி உணரவைப்பது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

## குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 9



தங்கள் சேவைகள், அமைப்புகள் மற்றும் செயல்பாடுகளைப் பயன்படுத்தும் பொழுது குழந்தைகள் பாதுகாப்பாக இருப்பதை நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும். இதில் குழந்தைகள் இணையத்தில் இருக்கும் பொழுதும் உள்ளடங்கும்.

உங்கள் நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆபத்துகளைக் கண்டறிந்து நிறுத்துவதை உறுதி செய்யவேண்டும். இதைச் செய்யும் பொழுது குழந்தைகளின் கீழ்கண்ட உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும்:
  - தனியுரிமை
  - தகவல்
  - நண்பர்களைக் கொண்டிருங்கள் தனியாக உணராமல் இருங்கள்
  - கற்றல்
- இணையப் பாதுகாப்பு குறித்து பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அறிந்திருப்பதை உறுதிசெய்யவேண்டும். இணையத்தில் இருக்கும்பொழுது, அவர்கள் உங்கள் நிறுவனத்தின் கீழ்கண்டவற்றைப் பூர்த்தி செய்யவேண்டும்
  - நடத்தை விதிகள்
  - குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு கொள்கை
- **ஆபத்து மேலாண்மை திட்டங்களை** எழுத வேண்டும். உங்கள் அமைப்புகள், செயல்பாடுகள் மற்றும் சுற்றுசூழலில் இருந்து வரும் ஆபத்துகளை நீங்கள் எவ்வாறு கையாள்வது என்பதற்கான திட்டங்கள் இவை.
- உங்கள் நிறுவனம் பிற நிறுவனங்களின் அம்சங்கள் அல்லது சேவைகளைப் பயன்படுத்தும் பொழுது குழந்தைகளின் பாதுகாப்பைப் உறுதிசெய்ய வேண்டும்.

## குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 10




### குழந்தைகளைத் தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாக்கும் வழிகளை நிறுவனங்கள் சரிபார்த்து மேம்படுத்த வேண்டும்.

உங்கள் நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- குழந்தைகள் மற்றும் இளம்வயதினரைப் பாதுகாப்பாக வைப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டியவற்றைச் சரிபார்த்து மேம்படுத்துதல்
- புகார்கள், கவலைகள் மற்றும் பாதுகாப்பு நிகழ்வுகளை கவனித்து அவை எப்படி ஏற்பட்டது என்பதை அறிதல். இது நீங்கள் செய்வதை மேம்படுத்த உதவும்
- நீங்கள் கண்டறிந்ததை பணியாளர்கள், தன்னார்வலர்கள், சமூகம், குடும்பங்கள் மற்றும் குழந்தைகளுக்குக் கூறுங்கள்.

## குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 11




### குழந்தைகளை எவ்வாறு தவறான பயன்பாடு மற்றும் தீங்கில் இருந்து பாதுகாப்பாக வைப்பது குறித்த எழுத்துப்பூர்வ ஆவணங்களை நிறுவனம் கொண்டிருக்க வேண்டும்.

உங்கள் நிறுவனம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- கீழ்கண்டவாறு எழுத்துப்பூர்வ கொள்கைகள் மற்றும் செயல்முறைகளைக் கொண்டிருக்க வேண்டும்:
  - அனைத்து குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளையும் உள்ளடக்கியவாறு
  - எளிதில் கண்டுபிடித்து புரிந்துகொள்ளுமாறு
- உங்கள் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை உருவாக்க **பங்குதாரர்களுடன்** பணிபுரிதல் உங்கள் நிறுவனத்தில் ஆர்வம் கொண்டவர்கள் இவர்கள். இவர்களாக இருக்கலாம்:
  - பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள்
  - குழந்தைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள்
  - நீங்கள் இணைந்து பணிபுரியும் பிற நிறுவனங்கள்
  - சமூகக் குழுக்கள் அல்லது உறுப்பினர்கள்
- பிற நிறுவனங்களில் இருந்து நல்ல கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளைக் கவனியுங்கள்
- கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை உங்கள் தலைவர்கள் ஆதரிப்பதை உறுதிசெய்யுங்கள்
- கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் புரிந்துகொண்டு பின்பற்றுவதை உறுதி செய்யவேண்டும்.

# எங்கே உதவி பெறுவது

தரநிலைகளை எட்டுவதற்கு உதவ குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை கட்டுப்பாட்டாளர் உங்களுக்குத் தகவல் வழங்கலாம்.

குழந்தைப் பாதுகாப்பு கட்டுப்பாட்டாளர்கள் குறித்து நீங்கள் இங்கே காணலாம்.

நீங்கள் இந்த வழியில் ஆணையத்தைத் தொடர்பு கொள்ளலாம்:

- தொலைபேசி: 1300 782 978
- மின்னஞ்சல்: contact@ccyp.vic.gov.au
- வலைத்தளம்: www.ccyp.vic.gov.au

Interpreter

உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் தேவைப்பட்டால், 13 14 50 என்ற எண்ணில் மொழிபெயர்ப்பாளர் மற்றும் மொழிபெயர்த்துரைப்பாளர் சேவையை அழைக்கவும். அவர்களிடம் 1300 782 978 என்ற எண்ணில் குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கான ஆணையத்தை அழைக்குமாறு கேட்கவும்.

விக்டோரியா முழுவதிலும் உள்ள நிலங்களின் பாரம்பரிய உரிமையாளர்களை ஆணையம் மரியாதையுடன் அங்கீகரித்து கொண்டாடுகிறது மற்றும் கடந்த, தற்போதைய மற்றும் வருங்கால சந்ததியினரின் முதியவர்கள், குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு தனது மரியாதையைச் செலுத்துகிறது.

© குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கான ஆணையம் 2023

இந்தப் பணி காப்புரிமை பெற்றது. *காப்புரிமைச் சட்டம் 1968* கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளவை தவிர, நிலை 18, 570 போர்க்கே தெரு, மெல்போர்ன் 3000 என்ற முகவரியில் உள்ள குழந்தைகள் மற்றும் இளம் வயதினரின் ஆணையத்திடம் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்த வகையிலும் எந்தப் பகுதியும் மீளுருவாக்கம் செய்யப்படக்கூடாது.

மே 2022 இல் இந்த ஆதாரவளத்தின் எளிய மொழி பதிப்பின் வளர்ச்சியில் enliven's Health Literary Services -இன் (**www.enliven.org.au** /**healthliteracy@enliven.org.au**) பங்களிப்பை ஆணையம் அங்கீகரிக்க விரும்புகிறது.
©1981-2022 இல் Tobii Dynavox உருவாக்கிய படத் தொடர்பு சின்னங்களைப் பயன்படுத்துவது உட்பட படங்களை என்லைவன் விக்டோரியாவால் உருவாக்கித் தழுவபட்டது.  அனைத்து உரிமைகளும் உலகளவில் கட்டுப்படுத்தப்பட்டது. அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டது. Boardmaker® Tobii Dynavox இன் வணிகக்குறியாகும். இந்த ஆவணம் மூன்றாம் தரப்பினருக்கு விற்கப்படக்கூடாது. அனுமதியின்றி படங்கள் மீண்டும் பயன்படுத்தப்படக்கூடாது.

COMMISSION FOR CHILDREN AND YOUNG PEOPLE